இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 37 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 31 – செவ்வாய்க்கிழமை 16 செப்டம்பர் 2025 – சென்னை 16 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 37: Thiruvalluvar Year - 2056 - Aavani 31 - Tuesday 16 September 2025 - Chennai 16 + 8 Pages ₹ 5.00




முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## “திராவிட மாடல்” அரசின் திட்டங்கள் வாக்கு அரசியலுக்காக அல்ல!

# மக்களின் குரலாகத் தி.மு.க.!

## “அன்புக்கரங்கள்” திட்டம் துவக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 16 -**

**‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்கள் வாக்கு அரசியலுக்காக அல்ல என்றும், மக்களின் குரலாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘அன்புக்கரங்கள்’ திட்டத்தை துவக்கி வைத்து உரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், “அன்புக்கரங்கள்” திட்டத்தை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு :-

எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா?

“அன்புக்கரங்கள்” திட்டத்தின் தொடக்க விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இனிமேல், நீங்கள் கவலைப்பட வேண்டாம்! உங்களை இன்னும் கவனித்துக் கொள்ளத்தான் இந்த அன்புக்கரங்கள் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். நான் இருக்கிறேன்... உங்களை பத்திரமாக பார்த்துக் கொள்வேன்!

**‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு இலக்கணம் வகுத்த தலைவர்!**

இன்றைக்கு மிகவும் முக்கியமான நாள்! பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள்! நம்முடைய தாய் நிலத்துக்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய தமிழ்த் தாயின் தலைமகன் அவருடைய பிறந்த நாள்! “ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்” என்று திராவிட மாடல் ஆட்சிக்கு இலக்கணம் எழுதிய மாபெரும் தலைவரின் பிறந்தநாள்!

இன்று, இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்து, இங்கு பேசிய குழந்தைகளின் சிரிப்பு தான் அண்ணா அவர்களுக்கு நாங்கள் செலுத்துகின்ற மரியாதை. மிகுந்த மனநிறைவையும், மகிழ்ச்சியையும் அடைந்து கொண்டிருக்கிறேன்!

திராவிட மாடல் என்றால் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்று எளிமையாக விளக்கம் சொல்லிவிடலாம். ஆனால், எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பது உழைப்பதும், பாடுபடுவதும் எளிதானது அல்ல!

இந்திய சமூகச் சூழலில், இவர்களுக்கெல்லாம் எதுவுமே தெரியாது தெரியக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களின் எழுச்சிதான், திராவிட இயக்கம்! அதனால்தான், மக்களோடு மக்களாக, மக்களுடைய குரலாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது!

மக்களுடைய தேவைகளை, இந்த சமூகத்துக்கு தேவையான மாற்றங்களை, ஆட்சிப் பொறுப்பைப் பயன்படுத்தி

> **“இந்திய சமூகச் சூழலில், இவர்களுக்கெல்லாம் எதுவுமே தெரியாது – தெரியக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களின் எழுச்சிதான், திராவிட இயக்கம்! அதனால்தான், மக்களோடு மக்களாக, மக்களுடைய குரலாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது!”**

இன்றைக்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்! அரசியல் என்பது மக்கள் பணி! அது கடுமையான பணி! எங்களைப் பொறுத்தவரைக்கும், இங்கே சொகுசுக்கு இடமில்லை!

**பெரியார், அண்ணா, கலைஞர் கற்றுத் தந்த உழைப்பு!**

நீங்களே பார்த்துக் கொண்டிருப்பீர்கள். காலையில் ஒரு இடத்தில் மக்கள்கூட பேசிக் கொண்டிருப்பேன். ஈவினிங் பல நூறு கிலோமீட்டர் கடந்து இன்னொரு ஊரில்... இன்னொரு பகுதியில் மக்கள் கூட இருப்பேன். இந்த உழைப்பைத்தான், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர், எங்களுக்கு கற்றுத் கொடுத்திருக்கிறார்கள். இப்படி எப்போதும் மக்களோடு மக்களாக இருக்கின்ற காரணத்தால்தான், கடைக்கோடி மனிதருக்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்து எங்களால் செய்ய முடிகிறது!

அரசியல் என்றால் பலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஏதோ, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்; பொறுப்பை மறந்து பதவி மோகத்தில் இருந்தோம்; சில கவர்ச்சித் திட்டங்களை செய்தோம்; மறுபடியும் பதவி மோகத்தோடு தேர்தலுக்கு தயாராவோம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், எங்களுடைய அடிப்படையே, “பதவி அல்ல; பொறுப்பு” தான்! அதிகாரம் என்பது சாமானியனுக்காக போராடுவது!

இன்றைக்கு, தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த அன்புக்கரங்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம். இதனால், 6,082 குழந்தைகளுக்கு, மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?

காலையில் பள்ளிக்கு பசியுடன் வர குழந்தையின் வேதனையைப் பார்த்தேன். காலை உணவுத் திட்டத்தை உருவாக்கினேன். இன்றைக்கு, 21 இலட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் சூடாக, சுவையாக சத்தான உணவை பரிமாறுகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?

சமூகத்தின் விளிம்பு நிலையில், எண்ணிக்கையில் சில நூறு சில ஆயிரம் மட்டுமே இருக்கின்ற மாற்றுத்திறனாளிகள் திருநர்கள் ஆகியோருக்கும் பார்த்துப் பார்த்துத் திட்டங்களை செயல்படுத்துகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?

**நெருக்கடிகளுக்கு இடையே ஆட்சிக்கு வந்தோம்!**

இன்னும் சொல்கிறேன்... நம்முடைய திராவிட மாடல் அரசு, என்ன மாதிரியான நெருக்கடியில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது என்று உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும்.

கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருந்த காலக்கட்டம் அது! ஏராளமான உயிர்கள் பறிபோனது. பலருடைய தொழில்கள் எல்லாம் முடங்கிப் போனது. பல குடும்பங்கள் தங்களுடைய முதுகெலும்பை இழந்து, பலவீனப்பட்டது. உடனே, இந்தியாவுக்கே முன்மாதிரி அரசாக, கொரோனாவால் பெற்றோரை இழந்த 15 ஆயிரத்து 775 குழந்தைகளுக்கு, 511 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கினோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

கொரோனாவால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு மாதந்தோறும் மூவாயிரம் ரூபாய் என்று 2021ல் ஆயிரத்து 148 குழந்தைகள் 2022ல் ஆயிரத்து 112 குழந்தைகள் 2023ல் ஆயிரத்து 12 குழந்தைகள் என்று, மூன்று ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கினோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கின்ற ஆயிரத்து நானூறு பெண் குழந்தைகளுக்கு தற்காப்பு மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் வழங்குகிறோம்.

**ஏராளமான திட்டங்களை பட்டியலிடலாம்!**

இதென்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களில் இருக்கின்ற ஊட்டசத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்க, அனைத்து சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களையும், தாய்ப்பால் வங்கியுடன் இணைத்திருக்கிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

இப்படி ஏராளமான திட்டங்களை, முன்னெடுப்புகளை எங்களால் பட்டியலிட்டு சொல்லிக் கொண்டே இருக்க முடியும்!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.